# රාජ්‍ය සේවා, පළාත් සභා හා පළාත් පාලන අමාත්‍යාංශය
## அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு
## Ministry of Public Services, Provincial Councils and Local Government

නිදහස් චතුරශ්‍රය, කොළඹ 07, ශ්‍රී ලංකාව. சுதந்திரச் சதுக்கம், கொழும்பு 07, இலங்கை. Independence Square, Colombo 07, Sri Lanka

| දුරකතන<br>தொலைபேசி:**(94) 011- 2694560**<br>Telephone | ෆැක්ස්<br>தொலைநகல்:**(94) 011- 2692254**<br>Fax | ඊ-මේල්<br>மின்னஞ்சல்:**dgcs@pubad.gov.lk**<br>E-mail | වෙබ් අඩවිය<br>இணையத்தளம்: **www.pubad.gov.lk**<br>Web Site |
|---|---|---|---|


| | | | | | |
|---|---|---|---|---|---|
| මගේ අංකය<br>எனது இல<br>My No | PS/GT/2020-(III වෙළුම) | ඔබේ අංකය<br>உமது இல<br>Your No | | දිනය<br>திகதி:<br>Date | 2021.12.15 |

*அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சுக்களின் செயலாளர்கள்/ மாகாண சபைகளின் பிரதம செயலாளர்கள்*

*இராஜாங்க அமைச்சுக்களின் செயலாளர்கள்*

*ஆணைக்குழுக்களின் செயலாளர்கள்*

*மாவட்ட செயலாளர்கள்*

*திணைக்களத் தலைவர்கள்*

***<u>பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்கும் நிகழ்ச்சி - 2020</u>***

*மேற்படி நிகழ்ச்சியின் கீழ் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட பயிலுநர் பட்டதாரிகளுக்கு நிரந்தர நியமனக் கடிதங்கள் வழங்கம் செயற்பாடுகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.*

*02. அதற்கான அனைத்துத் தகவல்களும் மாவட்ட செயலாளர்களிடமிருந்து ஏற்கனவே பெறப்படுள்ளதுடன் நியமனக் கடிதங்களை அச்சிடுவதற்காக misco மென்பொருள் தயாரிக்கப்பட்டு வருவதனால் இனிமேலும் பயிலுநர் பட்டதாரிகளின் சேவை நிலையத் திருத்தங்கள்/ இடமாற்றங்கள்/ மாகாணங்களுக்கிடையிலான மாற்றங்கள் செய்வதற்காக முன்வைக்கப்படும் கோரிக்கைகளை நிறைவேற்ற முடியாது என்பதைப் பணிவுடன் அறியத் தருகின்றேன்.*

*03. அதனால் நியமனம் கிடைக்கவுள்ள பயிலுநர்கள் பல்வேறு சேவை நிலையங்களை மாற்றுவதற்காக இந்த அமைச்சுக்கு வருகை தந்து அல்லது வருகை தராமல் முன்வைக்கும் எந்தவொரு கோரிக்கையும் கவனத்தில் கொள்ளப்படமாட்டாது என்பதையும் முறையான அனுமதியின்றி இந்நாட்களில் அமைச்சுக்கு வந்து நியமனம் வழங்கும் செயற்பாட்டுக்கு தடங்கல் ஏற்படுத்துவது, அந்த உத்தியோகத்தர்ககள் தொடர்பில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுப்பதற்குக் காரணமாக அமையும் என்பதை அந்த உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பது சிறந்தது.*

*04. அத்துடன் நிரந்தர நியமனம் பெற்றிராத பயிலுநர்களின் தனிப்பட்ட கோரிக்கைகளைக் கவனத்தில் எடுத்து நிறுவனங்களில் அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவி வெற்றிடங்கள் காணப்படுவதாக கடிதங்கள் வழங்குவது பொருத்தமான செயற்பாடு அல்ல என்பதையும் சுட்டிக் காட்ட விரும்புகிறேன்.*

*05. மேற்குறிப்பிடவை தவிர்ந்த வேறு தொடர்பாக உத்தியோகபூர்வ கடிதங்களை அனுப்புவதற்கு இந்த அறிவிப்பு பொருந்தாது என்பதை அறியத்தருகிறேன்.*

*ஒப்பம்./ ஜே.ஜே. ரத்னசிரி*

*செயலாளர்*

*அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு*